பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**09 05 2026** **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மேற்குவங்க முதலமைச்சராக பதவியேற்றுள்ள திரு சுவேந்து அதிகாரிக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2. தமிழகத்தில் தவெக தலைவர் திரு விஜய் தற்போது ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை சந்தித்து ஆட்சி அமைப்பதற்கான முயற்சி மேற்கொண்டுள்ளார்.

3. பன்முனை தாக்குதல் நடத்தும் **MIRV** அக்னி ஏவுகணை சோதனையை இந்தியா வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

4. பாகிஸ்தானில் பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்த்தப்பட்டிருப்பதற்கு அந்நாட்டின் மனித உரிமைகள் குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

-- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>

மேற்குவங்க முதலமைச்சராக பதவியேற்றுள்ள திரு சுவேந்து அதிகாரிக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மக்களுக்கான தலைவர் என்பதை திரு சுவேந்து அதிகாரி நிரூபித்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

மக்களின் தேவைகளை அறிந்து சிறப்பாக செயல்படக் கூடியவர் என்றும், அவர் தமது பதவிக்காலத்தில் வெற்றிகரமாக செயல்படுவார் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அவரது அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள திலிப் கோஷ், அக்னி மித்ர பால், அசோக் கிரிட்டினா உள்ளிட்டோருக்கும் பிரதமர் தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் தவெக தலைவர் திரு விஜய் தற்போது ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை சந்தித்து ஆட்சி அமைப்பதற்கான முயற்சி மேற்கொண்டுள்ளார்.

தற்போது தவெக தலைவர் திரு விஜய், ஆளுநரை சென்னை கிண்டியில் உள்ள மக்கள் மாளிகையில் சந்திக்க சென்றுள்ளார்.

விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகள் தவெக ஆட்சி அமைப்பதற்கு நிபந்தனையற்ற ஆதரவை இன்று தெரிவித்த தையடுத்து, திரு விஜய், ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரை சந்தித்து தாங்கள் ஆட்சி அமைப்பதற்கான ஆதரவு கடிதங்களை அளிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

ரவீந்திரநாத் தாகூரின் **165**-ஆவது பிறந்த நாளையொட்டி மேற்குவங்க மாநிலத்தில் உள்ள சாந்தி நிகேதனில் வண்ணமயமான கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இன்று காலை ரவீந்திரநாத் தாகூருக்கு பாரம்பரிய முறையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

காலை ஒன்பது மணிமுதல், ரவீந்திரநாத் தாகூரின் பாடல்கள் பாடப்பட்டன.

நடன நாட்டிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இந்நாளையொட்டி, தலைவர்கள், ரவீந்திரநாத் தாகூருக்கு புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், குருதேவ் ரவீந்திரநாத் தாகூரின் இலக்கியப் படைப்புகள் காலம் கடந்து நிற்பதாக புகழாரம் சூட்டியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில், மாபெரும் சிந்தனையாளராகவும், கவிஞராகவும் சிறந்து விளங்கியவர் என்றும் கூறியுள்ளார்.

மனித சமுதாயத்தின் ஆழமான உணர்வுகளை தமது கவிதைகளில் பிரதிபலித்தவர் என்றும், நாட்டின் மாண்புமிக்க கலாச்சாரத்தை போற்றும் வகையில் அவரது இலக்கிய படைப்புகள் அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சிந்தனையோடும், படைப்புத் திறனோடும் கலாச்சாரத்தையொட்டி அவர் தமது இலக்கிய படைப்புகளை அளித்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள செய்தியில், ஒரே பாரதம் — உன்னத பாரதம் என்ற சிந்தனைக்கு வித்திட்டவர் ரவீந்திரநாத் தாகூர் என்று கூறியுள்ளார்.

தலைசிறந்த சிந்தனையாளராகவும், இலக்கிய படைப்பாளியாகவும், இசை ஞானமிக்கராகவும் ரவீந்திரநாத் தாகூர் திகழ்ந்தார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரவீந்திரநாத் தாகூரின் தத்துவங்களும், வாழ்வியல் குறிப்புகளும் வருங்கால சமுதாயத்தினருக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளதாக திரு ராஜ்நாத் சிங் குறிப்பிட்டுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா விடுத்துள்ள செய்தியில், நாட்டு மக்களிடையே சுதந்திர உணர்வை தமது இலக்கியங்கள் வாயிலாக மக்களிடம் எடுத்துச் சென்றவர் ரவீந்திரநாத் தாகூர் என்று கூறியுள்ளார்.

தாகூரின் கீதாஞ்சலி மனித சமுதாயத்திற்கு புதிய பாதையை வகுத்துக் கொடுத்திருப்பதாகவும், ஆன்மிகம் மற்றும் மனித உணர்வுகளை பிரதிபலிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

தேச ஒற்றுமையையும், பெருமையையும், சுய மரியாதையையும் உணர்த்தும் ஜன கன மன பாடல் வரிகள் என்றென்றும் தேசிய கீதமாக இசைக்கப்பட்டு வருவதையும் திரு அமித் ஷா தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

நவீன MIRV அக்னி ஏவுகணை சோதனையை இந்தியா வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

ஒடிஷா கடற்கரையையொட்டி அப்துல் கலாம் தீவில் இந்த சோதனை நடத்தப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே நேரத்தில் பல்வேறு இலக்குகளை தாக்கும் திறனை இந்த நவீன அக்னி ஏவுகணை பெற்றுள்ளது.

இந்திய பெருங்கடல் பகுதியில் நீண்ட தூரத்தில் உள்ள பல்வேறு இலக்குகளை குறிவைத்து இந்த சோதனை நிகழ்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்த பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவன விஞ்ஞானிகளுக்கு, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்திய ராணுவமும், பாதுகாப்பு தொழில்துறையும் இணைந்து வெற்றிகரமாக இதனை வடிவமைத்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு கட்டமைப்பில் இந்த ஏவுகணை முக்கிய பங்காற்றும் என்றும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

2025-ஆம் ஆண்டுக்கான தேசிய பஞ்சாயத்து விருதுகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள 42 பஞ்சாயத்துகளுக்கு இந்த விருது வழங்கி கௌரவிக்கப்பட உள்ளதாக பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கர்நாடக மாநிலம் ஆறு தேசிய விருதுகளை பெற்று முதலிடத்தில் உள்ளது.

ஆந்திரப்பிரதேசம் மற்றும் ஒடிஷா தலா ஐந்து விருதுகளை பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளன.

தேசிய பஞ்சாயத்து விருதுகள் வழங்கும் விழா அடுத்த மாதம் 3-ஆம் தேதி புதுதில்லியில் நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>>

குஜராத், மேற்கு ராஜஸ்தான் பகுதிகளில் வெப்ப அலை தொடர்ந்து வீசக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளம், லட்சத்தீவு, தெற்கு கர்நாடகா, தமிழகம் புதுச்சேரி மற்றும் கரைக்கால் பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரள கடற்கரை பகுதிகளில் கடல் கொந்தளிப்பாக காணப்படும் என்றும் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<<<>>>>>>

சட்டவிரோத பணப்பரிவர்த்தனை முறைகேடு தொடர்பான வழக்கில், தொழில் அதிபர் **D.** வெங்கடேஷ்வர ராவ் உட்பட மூன்று பேரை அமலாக்கத்துறை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

**284** கோடி ரூபாய் அளவிற்கு முறைகேடு செய்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அமலாக்கத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

ஆர் டி ஜி எஸ் வங்கி பணப்பரிவர்த்தனை கட்டமைப்பை பயன்படுத்தி, போலியான ஆவணங்கள் மூலம் கடன் பெற்றிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

ஆகாஷ்வாணியின் கேரளம் நிலையங்களால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள கேரளம் வானொலி நாடக விழா நாளை தொடங்க உள்ளது.

ஒன்பது நாட்கள் நடைபெறும் இவ்விழா மலையாள திரைப்படம் மற்றும் நாடக துறையை சேர்ந்த புகழ்பெற்ற பல குரல்களை ஒன்றிணைத்து வானொலி நேயர்களுக்கு மறக்க முடியாத அனுபவத்தை தரும் என்று கூறப்பட்டுள்ளது.

இவ்விழாவில் தாதா சாஹேப் பால்கே விருது பெற்ற திரைப்பட நடிகர் திரு மோகன்லால் உட்பட பலர் பங்கேற்க உள்ளனர்.

<<<<<<>>>>>>

தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் பேரிஜம் ஏரியை சுற்றியுள்ள பகுதியில் காட்டு யானைகள் முகாமிட்டிருப்பதால், சுற்றுலாப் பயணிகள் செல்ல வனத்துறை தடை விதித்துள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte —ராஜசேகரன் - 35 Sec. )***

<<<<<<>>>>>>

இரண்டாம் உலகப்போரில் **Nazi** ஜெர்மனி படையை வென்ற **81**-ஆம் ஆண்டு நிறைவு தினத்தை ரஷ்யா இன்று கொண்டாடியது.

இதற்காக தலைநகர் மாஸ்கோவில் உள்ள செஞ்சதுக்கத்தில் நடைபெற்ற ராணுவ வீரர்களின் அணிவகுப்பை அந்நாட்டு அதிபர் திரு விளாடிமீர் புட்டின் பார்வையிட்டார்.

பின்னர் பேசிய அவர், யுக்ரைனுக்கு எதிரான தாக்குதலை நடத்திவரும் ரஷ்ய படையினர் முழுவீச்சில் செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

நேட்டோ ஆதரவு பெற்ற படைகளுக்கும் தக்க பதிலடி கொடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த ராணுவ அணிவகுப்பில் பீரங்கிகளோ, பெரிய ராணுவ தளவாடங்களோ இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

<<<<<<>>>>>>

பாகிஸ்தானில் பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்த்தப்பட்டிருப்பதற்கு அந்நாட்டின் மனித உரிமைகள் குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்தக்குழு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த விலைவாசி உயர்வு மக்களுக்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தும் என்றுதெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் அரசு அண்மையில் பெட்ரோல் விலையை **14** ரூபாய் **92** பைசாவாக உயர்த்தியது.

அதிவேக டீசல் விலை **15** ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது.

தற்போது, ஒரு லிட்டர் பெட்ரோல் **415** ரூபாய்க்கும், டீசலும் **415** ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இந்த விலைவாசி உயர்வை உடனடியாக திரும்பப் பெற்று மக்களின் சுமையை குறைக்க வேண்டும் என அந்தக் குழு வலியுறுத்தியுள்ளது.

போக்குவரத்து கட்டணங்கள் தன்னிச்சையாக உயர்த்தப்படுவதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியாக முடிவுகளை எடுக்கும்போது பாகிஸ்தான் அரசு மக்களின் பொருளாதார நிலையையும் கணக்கில் எடுத்து செயல்பட வேண்டும் என்றும் மனித உரிமைகள் குழு வலியுறுத்தியுள்ளது.

<<<<<<>>>>>>

நாடெங்கிலும் உள்ள தேசிய திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவனங்களில் கைவினை பயிற்றுனர் பயிற்சித் திட்டத்தில் மாணவர்

சேர்க்கைக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதில் சேருவதற்கு இம்மாதம் **31-**ஆம் தேதி நடைபெறும் அகில இந்திய பொது நுழைவுத் தேர்வு மூலம், மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர் என்று கூறப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் சேருவதற்கு விண்ணப்பங்களை நாளை வரை ஆன்லைனில் பதிவிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

ஜெய்பூரில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

-------------------

ஐ எஸ் எல் கால்பந்து ஜம்ஷெட்பூர் அணி பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

ஜம்ஷெட்பூரில் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

முன்னதாக கோவாவில் நடைபெற்ற கோவா — மோகன் பஹான் அணிகளுக்கு இடையே நடைபெற்ற மற்றொரு ஆட்டம் டிரா ஆனது. இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டன.

-------------

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியாவின் **Sahil Jadhav** வெண்கலப்பதக்கம் வென்றார்.

**<<<<<<END>>>>>>**